CC 01/2024

Date :06.10.2025

PW1-Karunanithi S/o Vetaiyan

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை பார்த்தேன் என்றால் சரியல்ல நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி என்னிடம் 300000 கடனாக கேட்டார் என்றால் கேட்க்கவில்லை. எப்போது என்னிடம் எதிரி கடன் கேட்டார் என்றால் 01.05.2023 ம் தேதி பத்து லட்சம் கடனாக கேட்டார் . நான் எப்போது எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் 15.05.2023 ம் தேதி எங்கள் வீட்டில் வைத்து கொடுத்தேன் . நான் கொடுக்கும்போது யாரெல்லாம் வீட்டில் இருந்தார்கள் என்றால் நானும் என் மனைவி மட்டும் இருந்தார். நான் நகையை அடகு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எவ்வளவு நாட்களில் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் என்றால் லோன் வாங்கிதருவதாக சொன்னார். எதிரி பூர்த்தி செய்யாத காசோலையை தான் கொடுத்தார் என்றும் அதை நான்தான் பூர்த்தி செய்துகொண்டேன் என்றால் சரிதான். ஆனால் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தார். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எதிரி பதில் அறிவிப்புஎதுவும் செய்யவில்லை என்றும் பணத்தை பத்து நாட்களில் திருப்பி தருவதாக என்னிடம் சொன்னதாக நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எதிரி எனக்கு 300000 கடனாக தரவேண்டும் என்றும் அந்த தொகையை எதிரி திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் எதிரி கடனுக்காக கொடுத்த காசோலையை அவரிடம் திருப்பி கொடுக்காமல் அதை பூர்த்தி செய்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.10.06 15:32:32 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,

சிவகங்கை.